[2022 மார்ச் 23

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ** ஆகவே, காவல் துறை இரும்புக்கரம் கொண்டு குற்றங்களைத் தடுப்பதற்கு, அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கையில் அமர்ந்துகொண்டே பேசக் கூடாது. எல்லோரும் அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையினுடைய கவனத்திற்கு சில குறிப்புகளைச் சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இருக்கையில் அமர்ந்து கொண்டே பேசக் கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

(இ) சென்னை, புதுப்பேட்டை காவலர் குடியிருப்பில் வசிக்கும் திரு. சக்திவேல், ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்களின் பாதுகாவலர் தாக்கப்பட்டது

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, புதுப்பேட்டை காவலர் குடியிருப்பில் வசித்து வருபவர் திரு. சக்திவேல். ஆயுதப்படை காவலரான இவர் ஓய்வுபெற்ற நீதிபதியும், முன்னாள் காவல் ஆணையத் தலைவருமான திரு. சி.டி. செல்வம் அவர்களுக்குப் பாதுகாவலராகப் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், நேற்றையதினம், காலையில் ஓய்வுபெற்ற நீதிபதியுடன் காரில் அசோக் நகரிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது, அசோக் நகர் சிக்னலில் உள்ள Hot Chips கடைக்கு அருகே வருகின்றபோது, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. உடனே, சக்திவேல் காரிலிருந்து இறங்கிவந்து போக்குவரத்தைச் சரி செய்ய முயன்றுள்ளார். அப்போது அந்த வழியாக வந்த, அடையாளம் தெரியாத 3 பேர் சக்திவேலுடன் தகராறில் ஈடுபட்டதுடன், அவர்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாக வெட்டிவிட்டு, இரு சக்கர வாகனத்தில் தப்பிச் சென்றுவிட்டனர். தகவலறிந்து, சம்பவ இடத்திற்கு வந்த அசோக் நகர் போலீசார் படுகாயம் அடைந்த சக்திவேலை மீட்டு, வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர். பின்னர், தகவலறிந்த சென்னை காவல் ஆணையாளர், சம்பவ

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 மார்ச் 23] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார். மேலும், அசோக் நகர் போலீசார் இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து, சி.சி. டி.வி. காட்சிகளை வைத்து, தற்போது மூன்று பேரையும் தேடி வருகின்றார்கள். ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலிருந்து பதிலை எதிர்பார்த்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டாவதாக சொன்ன கருத்திலுள்ள புகார், ஆதாரமில்லாதது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. புகார் எங்கும் பதிவாகாமல், நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) அதை மட்டும் நீக்கிவிட்டு, மீதி அனைத்துக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை மருத்துவர்கள்மீது தாக்குதல் மற்றும் பாலியல் வன்முறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி, சில பிரச்சினைகளை, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து சில செய்திகளை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், அவர் ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி இந்திரா நகரைச் சேர்ந்த இராமன் என்பவர் கடந்த 17–3–2022 அன்று சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் அளித்த புகாரில் வ.உ.சி. நகரைச் சேர்ந்த பாலா (எ) பரத், மணிகண்டன் உள்ளிட்ட சிலர் தன்னை குடிபோதையில் தாக்கியதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார். இப்புகார் தொடர்பாக, காவல் துறையினர் பரத், மணிகண்டன் உள்ளிட்ட மூவரைப் பிடித்து விசாரணை மேற்கொண்டபோது, 17–3–2022 அன்று அதிகாலை கேலக்சி திரையரங்கம் அருகே ஓர் ஆண் மற்றும் பெண் ஆகியோர் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென ஆட்டோவில் ஏறியபோது, அவர்களை தனியிடத்திற்கு அழைத்துச்சென்று

பரத், சந்தோஷ், மணிகண்டன் உள்ளிட்ட ஐவர், அப்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அவருடன் இருந்த ஆண் நபரை ஏ.டி.எம்.-க்கு அழைத்துச்சென்று சுமார் ரூ.40,000/- பறித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண் சி.எம்.சி. மருத்துவமனையில் மருத்துவராகப் பணிபுரியும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பெண் என்பதும், ஆண் நபர் அதே மருத்துவமனையில் பணிபுரியும் நாக்பூரைச் சேர்ந்த பிரனீத் ராஜ் கஷ்யப் என்பதும் தெரிய வந்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண் அவரது சொந்த மாநிலத்திற்குச் சென்றுள்ள நிலையில், நேற்று (22-3-2022) இணையவழி வாயிலாக அளித்த புகாரில், வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் குற்ற எண் 127/2022, இ.த.ச. பிரிவுகள் 147, 148, 342, 365, 368, 376(D), 376(E), 395, 397, 506(ii) உடன் இணைந்த பிரிவு 4-தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, பரத் உள்ளிட்ட நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முற்பகல் 11-55

(இ) சென்னை, புதுப்பேட்டை காவலர் குடியிருப்பில் வசிக்கும் திரு. சக்திவேல், ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்களின் பாதுகாவலர் தாக்கப்பட்டது-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்து, இன்னொன்றையும் சொன்னார்கள். அதாவது, ஓய்வுபெற்ற நீதியரசர் காரில் சென்று கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தையும் அவர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 4-வது காவல் ஆணையத்தின் தலைவரும், ஓய்வுபெற்ற நீதிபதியுமான திரு. சி.டி. செல்வம் அவர்கள் நேற்று, 22-3-2022 ஆம் தேதி தனது காரில் தனி பாதுகாவலர், தலைமைக் காவலர் திரு. சக்திவேல் என்பவரோடு அசோக் நகர், நூறடி சாலையில் உள்ள கே.கே. நகர் காவல் நிலையம் அருகே சென்று கொண்டிருந்திருக்கிறார்கள். அப்பொழுது அவருடைய வாகனம் அப்பகுதியிலுள்ள போக்குவரத்து சிக்னல் அருகே நின்றபோது, இருசக்கர வாகனத்தில் சென்ற அடையாளம் தெரியாத 3 நபர்கள் ஆணையத் தலைவரின் வாகனத்தின்முன்பு தங்களது வாகனத்தை நிறுத்தியிருக்கிறார்கள். உடனே தனி பாதுகாவலர் திரு. சக்திவேல் அவர்கள் வாகனத்தை நகர்த்த கூறியிருக்கிறார். இதனையடுத்து,

2022 மார்ச் 23] [திரு. மு.க. ஸ்டாலின்]

அந்த நபர்கள் தனி பாதுகாவலரிடம் வாக்குவாதத்திலே ஈடுபட்டு, அவர்களுள் ஒருவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரைத் தாக்கிவிட்டு இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றிருக்கிறார்கள். இதில் காயமுற்ற தனி பாதுகாவலர் திரு. சக்திவேல், வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்; நலமுடன் இருக்கிறார். இச்சம்பவம் குறித்து கே.கே. நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 127/2022, இ.த.ச. பிரிவுகள் 341, 294பி, 324, 307, 506(ii)-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள். 'இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சென்னை மாநகர ஆணையருக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன். இதுசம்பந்தமாக, நானே ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. சி.டி. செல்வம் அவர்களிடத்திலே தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, விவரங்களை எல்லாம் கேட்டிருக்கிறேன்.

(அ) விருதுநகர் மாவட்டம், பாலியல் வன்முறை குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *அடுத்து, விருதுநகரைப் பற்றி ஒரு பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். விருதுநகரிலே 22 வயது பெண்ணிடமிருந்து பாலியல் வன்முறை புகார் வந்தவுடன், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 4 பேர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மீதியுள்ள 4 பேர் சிறார் நீதிமன்றத்தின் கூர்நோக்கு இல்லத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகள் விரைந்து தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக, தற்போது வழக்கு மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவு-சி.பி.சி.ஐ.டி. பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. சி.பி.சி.ஐ.டி. கண்காணிப்பாளர் திருமதி முத்தரசி அவர்கள் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்கு தனி நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும். விரைந்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரப்படும். அதுவும் அதிகபட்ச தண்டனை பெறப்படும் என்பதை ஆணித்தரமாக, உறுதிபட இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

'அரசே மனிதன் தன் வயிற்றை நிரப்ப படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல, என்றைக்கு அவன் வயிறு நிறைய உண்டு மகிழ்கிறானோ, அன்றைக்கெல்லாம் அவனுக்கு சிறந்த காலமே; அதுவுமில்லாமல், நாளெல்லாம் கடுமையாகப் பாடுபட்டும், வயிறார உண்ண முடியாமல் அவன் அவதியுறும் நாட்களெல்லாம் அவனுக்குக் கஷ்ட காலம்தான்' என்றார். (குறுக்கீடு) எல்லோருக்கும்தான்.

மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக் கூறியதுபோல, 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்கிற சிறப்பான நல்ல காலம் மீண்டும் திரும்பும் என்று தெரிவித்து, வாய்ப்புக்கு அனைவருக்கும் நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) சென்னை, புதுப்பேட்டை காவலர் குடியிருப்பில் வசிக்கும் திரு. சக்திவேல், ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்களின் பாதுகாவலர் தாக்கப்பட்டது–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 3–35

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேரம் இல்லா நேரத்திலே முன்னாள் நீதியரசர் திரு. சி.டி. செல்வம் அவர்களின் தனி பாதுகாவலர் தாக்கப்பட்டது குறித்துப் பேசினார். அதற்கு நான் பதில் சொல்கின்றபோது, சென்னை காவல் துறை விரைந்து குற்றம் புரிந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும், கைது செய்யப்படுவார்கள் என்று கூறியிருந்தேன். தற்போது, சென்னை காவல் துறை ஆணையரிடமிருந்து எனக்கு வந்திருக்கக்கூடிய தகவல், நேற்று சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்த சிசிடிவி-யில் பதிவான காட்சியின் அடிப்படையில், விசாரணை மேற்கொண்டதில், குற்றத்தில் ஈடுபட்ட ஆதம்பாக்கத்தினைச் சேர்ந்த புருஷோத்தமன் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)